தேவ பாதுகாப்பிற்கான அறிக்கை

எனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம். எனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவை நான் குற்றப்படுத்துவேன். இது கர்த்தருடைய ஊழியக்காரனாகிய என்னுடைய சுதந்தரம். சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, என்னுடைய நீதி உம்மால் உண்டாயிருக்கிறது.[1]

எனக்கு விரோதமாய் யார் பேசினாலும் அல்லது விரோதமாய் ஜெபித்தாலும் அல்லது என்னை ஒதுக்கி தள்ளித் தீங்கிழைக்க நினைநித்தாலும் அவர்களை நான் மன்னிக்கிறேன். மன்னித்த நான் கர்த்தருடைய நாமத்திலே அவர்களை ஆசீர்வதிக்கிறேன்.[2]

கர்த்தாவே, நீர் மாத்திரமே என் தேவன். உம்மைத் தவிர எனக்கு நீதியுள்ள தேவனும் இரட்சகரும் யாருமில்லை. பிதா, குமாரன், பரிசுத்த ஆவியே நான் உம்மை ஆராதிக்கிறேன்.

நிபந்தனையற்ற கீழ்ப்படிதலுக்கு என்னைப் புதிதாக ஒப்புக்கொடுக்கிறேன். உம்மிடம் ஒப்புக்கொடுத்த நான், உம்முடைய வார்த்தையின்படி நடப்பேன். கர்த்தாவே, நான் பிசாசுக்கு எதிர்த்து நிற்கிறேன். அவன் தொல்லைகள், தாக்குதல்கள், ஏமாற்றுதல், பயன்படுத்தும் ஆயுதம், எனக்கு விரோதமாய் எழச்செய்யும் நபர் போன்றவற்றிற்கு எதிர்த்து நிற்கிறேன். அதற்கு என்னை ஒப்புக்கொடுக்கமாட்டேன். நான் எதிர்த்து நின்று அவனை விரட்டியடிப்பேன். இயேசுவின் நாமத்தில் என்னிலிருந்து அகற்றுவேன். சிறப்பாக நான் பெலவீனம், வலி, வீக்கம், பாதிப்புகள், கேன்சர், அலர்ஜி, வைரஸ் மேலும் எல்லாவித பில்லிசூனியங்கள், அழுத்தங்களுக்கு எதிர்த்து நிற்கிறேன்.

இறுதியாகக் கர்த்தாவே, இயேசு கிறிஸ்துவின் சிலுவை தியாக மரணத்தால் சாபத்திலிருந்து விலகி நீர் எல்லா வகையிலும் ஆசீர்வதித்த ஆபிரகாமின் ஆசீர்வாதங்களுக்குள் கடந்து வருகிறேன்.[3] உயர்வு, ஆரோக்கியம், பலுகிப்பெருகுதல், செழிப்பு, வெற்றி, தேவ தயவு, தேவ நட்பு எனக்குச் சொந்தமாகும். ஆமென்.

ஏசாயா 54:17

உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம்; உனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நீ குற்றப்படுத்துவாய்; இது கர்த்தருடைய ஊழியக்காரரின் சுதந்தரமும் என்னாலுண்டான அவர்களுடைய நீதியுமாயிருக்கிறதென்று கர்த்தர் சொல்லுகிறார்.

மத்தேயு 5 :43-45

உனக்கடுத்தவனைச் சிநேகித்து, உன் சத்துருவைப் பகைப்பாயாக என்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்; அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்.

ரோமர் 12:14

உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள்; ஆசீர்வதிக்கவேண்டியதேயன்றி சபியாதிருங்கள்.

கலாத்தியர் 3:13-14

மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார். ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும்படியாகவும், ஆவியைக்குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும் இப்படியாயிற்று.

ஆதியாகமம் 24:1

ஆபிரகாம் வயதுசென்று முதிர்ந்தவனானான். கர்த்தர் ஆபிரகாமைச் சகல காரியங்களிலும் ஆசீர்வதித்து வந்தார்.

For more copies of this bookmark please contact a Derek Prince Ministries office below.

DPM-India (English)
admin@derekprince.in
derekprince.com/en-in

DPM-India (Tamil)
admin@derekprince.in
www.derekprince.com/ta

DPM-Asia/Pacific
enquiries@dpm.co.nz
www.derekprince.com/en-nz

DPM-Australia
enquiries@au.derekprince.com
www.derekprince.com.au